



# அகர முதல

Aagaramuthalaa

மின்னிதழ்

www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு

9597887847 / 8870884969



செவ்வாய், அக்டோபர் 19.2021 கடலூர் மலர்:10 இதழ்:14


# கடலூர் மாவட்ட செய்திகள்

## தமிழக வரலாற்றில் முதன்முறையாக கடலூரில் 100 ரூபாயை கடந்து விற்பனையாகும் டீசல்

## சிதம்பரத்தில் மாணவன் தாக்கப்பட்ட சம்பவம்-வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் ஆசிரியர் கைது



தமிழகம் முழுவதும் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக கொரோனா பரவல் அதிகமாக இருந்த காரணத்தால் பள்ளிகள் மற்றும் பல்வேறு மக்கள் கூடும் பகுதிகள் திறக்கப்படாமல் இருந்தன இந்நிலையில் கடந்த சில மாதங்களாக கொரோனா தொற்று பரவல் குறைய தொடங்கியதை அடுத்து ஊரடங்கு உத்தரவில் பல்வேறு தளர்வுகளை அரசு அறிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து கடந்த சில தினங்களுக்கு முன்பு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ — மாணவிகளுக்கு பள்ளிகள் திறக்கப்பட்டது. இந்நிலையில் கடலூர் மாவட்டம் சிதம்பரம் நந்தனார் அரசு ஆண்கள் பள்ளியும் தொடங்கப்பட்டு நடைபெற்று வந்தது இந்நிலையில் அங்கு படிக்கும் பிளஸ் 2 மாணவர்கள் சிலர் வகுப்புகளுக்கு சரியாக செல்லாமல் வெளியே சுற்றுவதாக புகார் வந்தன. இதை தொடர்ந்து மாணவர்களை பள்ளி ஆசிரியர்கள் கண்காணித்து வந்தனர். அப்போது அந்த பள்ளியில் பிளஸ் 2 படிக்கும் அம்மாபேட்டை பகுதியை சேர்ந்த 6 மாணவர்கள் ஒருசில வகுப்புகளை புறக்கணித்து வெளியே சுற்றுவது தெரிய வந்து உள்ளது. இதையடுத்து அந்த மாணவர்களை பள்ளியின் இயற்பியல் ஆசிரியர் சுப்பிரமணியன் (55) அழைத்து கண்டித்து உள்ளார். இதையடுத்து அந்த மாணவர்களை ஆசிரியர் சுப்பிரமணியன் முட்டிபோட வைத்து பின் பிரம்பால் கொடூரமாக அடித்து பின் காலால் உதைத்து உள்ளார். இதனை வகுப்பில் இருந்த ஒரு சில மாணவர்கள் கைப்பேசி மூலம் வீடியோ எடுத்தனர் . பின் அந்த காட்சிகளை சமூக வலைதளங்களில் பதிவிட்டு உள்ளனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. இதைபார்த்த பள்ளியின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அதிர்ச்சியடைந்தனர். அதற்கு பின் இந்த சம்பவம் குறித்து சிதம்பரம் நகர காவல் துறையில் மாணவன் கொடுத்த புகாரின் பேரில் வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட 6 பிரிவுகளின் கீழ் வழக்குபதிவு செய்து பின்னர் ஆசிரியர் சுப்பிரமணியனை கைது செய்தனர். அதற்கு பின் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிதம்பரம் கிளை சிறையில் அடைத்தனர். மாணவர்களை ஆசிரியர் தாக்கிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானதை தொடர்ந்து ஆசிரியர் சுப்பிரமணியனை சஸ்பெண்டு செய்து மாவட்ட கல்வி நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் பாலசுப்பிரமணியம் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். பள்ளிக்கு வரும் மாணவர்களை இதுபோல் நடத்தும் சம்பவங்கள் பல நடந்துள்ளன ஆதலால் இந்த சம்பவம் சிதம்பரம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கடலூரில் சர்வதேச பேரிடர் தணிப்புதினம் மற்றும் பேரிடர் மீட்பு ஒத்திகை நிகழ்ச்சி



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சர்வதேச பேரிடர் தணிப்பு தினம் 2021 மற்றும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு பேரிடர் மீட்பு ஒத்திகை நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் கி.பாலசுப்ரமணியம், தலைமையில் நடைபெற்றது. அக்டோபர் 13 ம் நாள், சர்வதேச பேரிடர் தணிப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது. பேரிடர் தணிப்பை நோக்கமாக கொண்ட நடவடிக்கைகள், விழிப்புணர்வுகள், முதலீடு , பேரிடர் தணிக்கைக்கான கூட்டு மேலாண்மை, தேசிய, மாநில, மாவட்ட நிர்வாகம் ஆகியவை இணைந்து செயல்பட இன்றைய தினம் வலியுறுத்துகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை மூலம் பேரிடர் காலங்களில் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மீட்பதற்கு பயன்படுத்தும் ரப்பர் படகுகள், மரம் அறுக்கும் இயந்திரம் உள்ளிட்ட பல்வேறு வகையான பேரிடர் மீட்பு உபகரணங்கள் வைக்கப்பட்டிருந்ததை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் எதிரில் உள்ள தென்பெண்ணையாற்றில் தீயணைப்பு மற்றும் மீட்பு படையினர் பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களை மீட்பது மற்றும் அவர்களுக்கு மருத்துவ முதலுதவி சிகிச்சை அளிப்பது உள்ளிட்ட ஒத்திகையை நடத்தி காட்டினர். இதில் நீரில் தத்தளிப்பவர்களை மீட்பது, அவர்களுக்கு முதலுதவி அளித்து, அவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது மற்றும் பேரிடர் காலங்களில் தகவல் பரிமாற்றங்கள் குறித்தும், இடிபாடுகளில் சிக்சியவர்களை மீட்பது குறித்தும் செயல் விளக்கம் அளித்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சி. சக்திகணேசன் கூடுதல் ஆட்சியர் வருவாய் ரஞ்ஜீத்சிங் வருவாய் கோட்டாட்சியர் அதியமான்கவியரசு, மாவட்ட அலுவலர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணி) லோகநாதன் துணை காவல் கண்காணிப்பாளர் கரிகால்பாரிசங்கர் மாவட்ட ஆயுதப்படை ஆய்வாளர் முத்துகுமரன், நிலைய அலுவலர்கள் தீயணைப்பு மற்றும் மீட்பு பணி ஜமுனாராணி விஜயகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் காவல் துறையினர், தீயணைப்பு துறையினர் கலந்து கொண்டனர்.

## மணல் கடத்தலை தடுக்க முயன்றபோலீஸ் ஏட்டுவை லாரி ஏற்றி கொல்ல முயற்சி-டிரைவருக்கு வலைவீச்சு



பண்ருட்டி அருகே கீழ்மாம்பட்டில் உள்ள கெடிலம் ஆற்றில் இருந்து வாகனங்களில் மணல் கடத்தப்படுவதாக மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்துக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சக்தி கணேசன், மணல் கடத்தலை தடுப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த தனிப்படை போலீசை தொடர்பு கொண்டு கீழ்மாம்பட்டு கெடிலம் ஆற்றுக்கு சென்று, மணல் கடத்துவோர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். அதன்படி தனிப்படையில் இருப்பவரும், புதுப்பேட்டை போலீஸ் நிலையத்தில் ஏட்டாக பணிபுரிந்து வருபவருமான சங்கர், தனது மோட்டார் சைக்கிளில் கெடிலம் ஆற்றுக்கு விரைந்து சென்றார். போலீசை கண்டதும், கெடிலம் ஆற்றில் இருந்து மணல் லாரியை டிரைவர் வேகமாக இயக்கினார். உடனே ஏட்டு சங்கர், அந்த லாரியை விரட்டிச் சென்றார். சிறிது தூரத்தில் லாரியை முந்திச்சென்று, லாரியை தடுத்து நிறுத்த முயன்றார். ஆனால் டிரைவரோ லாரியை நிறுத்தாமல், போலீஸ் ஏட்டு சங்கரின் மோட்டார் சைக்கிள் மீது வேகமாக மோதி விட்டு நிற்காமல் சென்று விட்டார். இதில் மோட்டார் சைக்கிளுடன் தூக்கி வீசப்பட்ட ஏட்டு சங்கர், படுகாயமடைந்தார். அவரை அந்த வழியாக வந்த பொதுமக்கள் மீட்டு சிகிச்சைக்காக பண்ருட்டி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது . பின்னர் மேல் சிகிச்சைக்காக சங்கர் , கடலூர் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்த புகாரின் பேரில் காடாம்புலியூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து ஏட்டு மீது மோதிவிட்டு மணலை கடத்திச்சென்ற லாரி டிரைவரை வலைவீசி தேடி வருகின்றனர். மணல் கடத்தலை தடுக்க முயன்ற போலீஸ் ஏட்டுவை லாரி ஏற்றி கொல்ல முயன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



## தமிழக வரலாற்றில் முதன்முறையாக
# கடலூரில் 100ரூபாயை கடந்து விற்பனையாகும் டீசல்




தமிழக வரலாற்றிலேயே டீசல் விலை 100 ஐ தாண்டியுள்ளது மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சில மாதங்களாக பெட்ரோல், டீசல் விலை தினந்தோறும் புதிய உச்சத்தை எட்டி வருகிறது. பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து உயர்ந்து வருவது பொதுமக்களையும், வாகன ஓட்டிகளையும் அவதியுற வைத்துள்ளது. பெட்ரோல்,டீசல் விலை உயர்வின் காரணமாக அத்தியாவசிய பொருட்கள், காய்கறிகள் ஆகியவற்றின் விலையும் உயரும் நிலை ஏற்பட்டு இருக்கிறது. இந்நிலையில் தமிழக அரசு மக்களின் வேதனையைக் கண்டு தேர்தலில் அளித்த வாக்குறுதியின் படி பெட்ரோல் டீசல் மீதான வரியை குறைத்து பெட்ரோல் டீசலில் 3 ரூபாய் விலை குறைக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்து விலையை ஏற்றி வருவதால் தமிழகத்தில் டீசல் விலை கடலூர் மாவட்டத்தில் 100 ஐ தாண்டி விற்பனை ஆகிறது .சென்னையில் பெட்ரோல் விலை ஒரு லிட்டர் ரூ.103 ஆகவும், டீசல் விலை ஒரு லிட்டர் ரூ98.92 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் சென்னையில் இருந்து 190 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் கடலூரில் பெட்ரோல் விலை லிட்டர் ரூ.105.1 ஆகவும், டீசல் விலை ஒரு லிட்டர் ரூ100.8 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல் கடலூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் டீசல் விலை 100 ரூபாயை தாண்டி விற்பனை ஆகிக்கொண்டு உள்ளது. இந்த டீசல் விலை தமிழகத்திலே கடலூரில் தான் அதிகமாக விற்பனை ஆகிறது, இந்த விலையேற்றம் கடலூர் பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதே நிலை நீடித்தால் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 100 ரூபாயை கடந்து விற்பனை ஆகும் நிலை ஏற்படும்.நாளுக்கு நாள் பெட்ரோல் மற்றும் டீசல் விலை ஏற்றம் என்பது பொது மக்களிடையே ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது, இதனால் இன்னும் சிறிது காலத்தில் மக்களிடையே பெரும் பொருளாதார பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆதலால் இதனை சீராக்க தமிழகத்தில் எப்படி வரியை குறைத்து பெட்ரோல் டீசல் விலையை குறைத்தார்களோ அதேபோல் மத்திய அரசும் மற்ற மாநிலங்களும் ஒன்றாக இணைந்து வரியை குறைத்தால் மட்டுமே பெட்ரோல் டீசல் விலையை கட்டுப்படுத்த முடியும் என பெட்ரோல் விற்பனையாளர் சங்கம் முரளி தெரிவித்துள்ளார். தற்பொழுது தான் மக்கள் கொரோனா ஏற்படுத்திய தாக்கத்தில் இருந்து சிறிது சிறிதாக மீண்டு வருகின்றனர், இந்நிலையில் இவ்வாறான விலை ஏற்றம் என்பது அனைத்து பொதுமக்களையும் வெகுவாக பாதித்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

## கடலூர்: 300 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள்
# தண்ணீரில் மூழ்கின....



விருத்தாசலம் அருகே உள்ள காவனூர், பவழங்குடி, கீரமங்கலம், மருங்கூர், மேலப்பாளையூர் உள்ளிட்ட 10—க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் தங்களுக்கு சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்களில் சம்பா நெல் சாகுபடி செய்து, பராமரித்து வந்தனர். இதுதவிர கரும்பு, மணிலா உள்ளிட்ட பல்வேறு பயிர்களையும் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக விருத்தாசலம் பகுதியில் இடி—மின்னலுடன் பலத்த மழை பெய்து வந்தது. இதனால் மேற்கண்ட கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டிருந்த சுமார் 300 ஏக்கர் விளைநிலங்களுக்குள் மழைநீர் புகுந்து குளம்போல் தேங்கி நிற்கிறது. இந்த நீரை அகற்ற விவசாயிகள் முயற்சி செய்தும், அவர்களால் முடிய வில்லை கடந்த 5 நாட்களாக விளை நிலத்தில் தண்ணீர் தேங்கி உள்ளதால் நெல், மணிலா உள்ளிட்ட பயிர்கள் அழுகி வருகிறது. இதனால் பல லட்சம் ரூபாய் செலவு செய்து பயிர்களை சாகுபடி செய்திருந்த விவசாயிகள் தற்போது விளை நிலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதை கண்டு கண்ணீர் வடித்து வருகிறார்கள். இதுகுறித்து மருங்கூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில், விருத்தாசலம் பகுதிகளில் உள்ள ஏரி, குளங்களுக்கு தண்ணீர் செல்லும் வாய்க்கால்கள் மற்றும் வடிகால் வாய்க்கால்கள் பெரும்பாலனவை ஆக்கிரமிப்பில் சிக்கி உள்ளது. இதனால் ஆண்டுதோறும் மழைகாலங்களில் விளைநிலங்களுக்குள் மழைநீர் புகுந்து பயிர்கள் அழுகி வருகிறது. மருங்கூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான வடிகால் வாய்க்கால்களை தனிநபர்கள் சிலர் ஆக்கிரமித்துள்ளனர். ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் நாங்கள் பலமுறை கோரிக்கை வைத்தும், இதுவரை ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை. இதனால் என்னை போன்ற விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் நலன்கருதி மேற்கண்ட கிராமங்களில் ஆக்கிரமிப்பில் உள்ள வடிகால் வாய்க்கால்களை மீட்டு, தூர்வாரி வயல்களில் தேங்கி நிற்கும் மழைநீர் வழிந்தோட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் மழைநீரால் அழுகிய பயிர்களை அதிகாரிகள் மூலம் ஆய்வு செய்து, உரிய நிவாரணமும் வழங்கவேண்டும் என்றார்.

# விருத்தாசலம் அருகேடாஸ்மாக் ஊழியர்களை கடைக்குள் வைத்து பூட்டிய வாலிபர்...



விருத்தாசலம் அருகே உள்ள ஏனாதிமேடு கிராமத்தில் டாஸ்மாக் கடை இயங்கி வருகிறது. இந்த கடைக்கு அதே கிராமத்தை சேர்ந்த கவியரசன் (வயது 2 7) என்பவர், அடிக்கடி வந்து ஓசிக்கு மதுபாட்டில்கள் கேட்பதும், அவரை ஊழியர்கள் திட்டி அனுப்பி வைப்பதும் வழக்கம். இந்த நிலையில் நேற்று முன்தினமும் கவியரசன், டாஸ்மாக் கடைக்கு ஓசிக்கு மதுபாட்டில் கேட்டுள்ளார். அதற்கு டாஸ்மாக் ஊழியர்கள் மறுத்தனர் . இதனால் ஆத்திரமடைந்த கவியரசன், மதுபாட்டில் தர மறுத்த ஊழியர்களை ஆபாசமாக திட்டியதோடு, அவர்களை கடைக்கு உள்ளேயே வைத்து ஷட்டரை இழுத்து பூட்டிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார். இதனால் அதிர்ச்சி அடைந்த ஊழியர்கள், இது பற்றி விருத்தாசலம் போலீஸ் நிலையத்துக்கு செல்போன் மூலம் தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து கடையின் ஷட்டரை திறந்து டாஸ்மாக் கடை ஊழியர்களை மீட்டனர். இது குறித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிந்து, கவியரசனை கைது செய்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## புவனகிரி அருகே மின்சாரம் தாக்கி வாலிபர் பலி
# மனைவி வளைகாப்பு நாளில் பரிதாபம்



புவனகிரி அருகே உள்ள உடையூர் கிராமத்தை சேர்ந்தவர் ஜம்புலிங்கம் மகன் தமிழரசன் . இவருக்கும், பிரியா என்ற பெண்ணுக்கும் கடந்த ஓராண்டுக்கு முன்பு திருமணம் நடந்தது. 7 மாத கர்ப்பிணியாக இருந்த பிரியாவுக்கு நேற்று மதியம் வளைகாப்பு நிகழ்ச்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதற்கிடையில் மதியம் தானே வளைகாப்பு, அதிகாலையிலேயே வேலைக்கு சென்று வந்து விடலாம் என்று தமிழரசன் நினைத்தார். அதன்படி நேற்று அதிகாலை 5 மணியளவில் தமிழரசன் விவசாய வேலைக்கு சென்றார். அவர் வளர்த்து வந்த நாயும், அவருடன் சென்றது. அப்போது ஒரு வயல் ஓரத்தில் மின் கம்பி அறுந்து கிடந்தது. இதை கவனிக்காமல் சன்ற தமிழரசன், அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்து விட்டார். இதில் மின்சாரம் தாக்கியதில் தமிழரசன் சம்பவ இடத்திலேயே இறந்தார். அவருடன் சென்றிருந்த நாயும், மின்சாரம் தாக்கி இறந்தது. இதை அந்த வழியாக சென்றவர்கள் பார்த்து, உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் பிரியா மற்றும் உறவினர்கள் அங்கு வந்து கதறி அழுதது காண்போரின் கண்களில் இருந்து கண்ணீரை வரவழைத்தது. இது பற்றி தகவல் அறிந்ததும் புவனகிரி போலீஸ் இன்ஸ்பெக்டர் சரஸ்வதி, சப்—இன்ஸ்பெக்டர் சந்தோஷ் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தமிழரசன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சிதம்பரம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து பிரியா கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திவருகின்றனர். மனைவிக்கு மதியம் வளைகாப்பு நிகழ்ச்சி நடத்த இருந்த நிலையில் மின்சாரம் தாக்கி கணவர் இறந்த சம்பவத்தால் அந்த கிராமமே சோகத்தில் மூழ்கியது.

அகர முதல
தொடர்புக்கு 9597887847 8870884969
Aagaramuthalaa
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969